பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

29 10 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று ரஃபேல் போர் விமானத்தில் பயணம் செய்கிறார்.

2. மும்பையில் நடைபெற்று வரும் இந்திய கடல்சார் மாநாடு, இத்துறையில் புதிய ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. விவசாயிகளுக்கு, உரிய நேரத்தில் குறைந்த விலையில் உரங்கள் கிடைப்பதை உறுதிசெய்ய, அரசு உறுதி பூண்டுள்ளதாக, மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

4. போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட கப்பல்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர்.

5. வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த Montha புயல் ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகேயுள்ள நரசப்பூர் பகுதியில் நள்ளிரவில் கரையைக் கடந்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று ரஃபேல் போர் விமானத்தில் பயணம் செய்கிறார்.

ஹரியானா மாநிலம் அம்பாலா விமானப்படை தளத்திற்கு செல்லும் அவர், அங்கிருந்து, போர் விமானப் பயணத்தை மேற்கொள்ள உள்ளார்.

ஏற்கனவே அவர், கடந்த 2023-ம் ஆண்டு அஸ்ஸாம் மாநிலம் தேஸ்பூர் விமானப்படை தளத்திலிருந்து, சுகோய் 30MKI ரக விமானத்தில் பயணம் செய்துள்ளார்.

**<<<<>>>>**

மும்பையில் நடைபெற்று வரும் இந்திய கடல்சார் மாநாடு, இத்துறையில் புதிய ஒத்துழைப்புகளை மேற்கொள்ள வழிவகை செய்யும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த மாநாட்டில் இன்று தாம் பங்கேற்பதுடன், கடல்சார் தொழில்துறை சார்ந்த தலைமைச் செயல் அதிகாரிகள் கூட்டத்திற்கும் தலைமை வகிக்க இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாடு கடல்சார் துறையில் இந்தியா மேற்கொண்டு வரும் சீர்திருத்தங்களை எடுத்துரைப்பதாக அமையும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

<<<<>>>>

விவசாயிகளுக்கு, உரிய நேரத்தில் குறைந்த விலையில் உரங்கள் கிடைப்பதை உறுதிசெய்ய, அரசு உறுதி பூண்டுள்ளதாக, மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், நடப்பு கரீஃப் பருவத்தில், திருப்திகரமான அளவிற்கு பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருப்பதால், இந்த ஆண்டு விளைச்சல் அதிகரிக்கும் என்று குறிப்பிட்டார்.

நெற்பயிர் மட்டும், நான்கு லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் நடவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்.

சுமார் 190 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் எண்ணெய்வித்துக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், இதில், நிலக்கடலை மற்றும் சோயாபீன் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று, நூறு லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டிய திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், இது, ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதாக அமையும் என்றும் கூறியுள்ளார்.

<<<<>>>>

பாலின அடிப்படையிலான பாகுபாடுகளை அகற்றுவதில், இந்தியா, குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளதாக, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், மத்திய கண்காணிப்பு வாரியக் கூட்டத்தில் பேசிய அவர், பாலின பாகுபாடுகளை அறவே அகற்ற இந்தியா உறுதி பூண்டிருப்பதாகக் கூறினார்.

பாலின சமத்துவத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2021-23ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பதிவு ஆய்வின்படி, பிறப்புகால பாலின விகிதம், 12 மாநிலங்களில், தேசிய சராசரியான 917-ஐ விட அதிகமாக பதிவாகியிருப்பதாக குறிப்பிட்ட அவர், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும், இதுகுறித்து, அதிகளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பெண் குழந்தைகள் ஆரோக்கியமாக வாழ்வதை உறுதிசெய்ய கூட்டுமுயற்சிகள் தேவை என்றும் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான வர்த்தகத்தை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு ஒப்பந்தங்கள் ஏற்பட இருப்பதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், Brussels நகரில் ஐரோப்பிய யூனியனின் வர்த்தக பொருளாதார ஆணையர் திரு. Maros Sefcovic உடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் இந்தியாவிலும், ஐரோப்பிய யூனியன் நாடுகளிலும் பரஸ்பர முதலீடு, வர்த்தகம் அதிகரிப்பதுடன் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ள நிலையில், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பாட்னாவில் நேற்று இதனை வெளியிட்டுப் பேசிய ராஷ்ட்ரீய ஜனதா தள மூத்த தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், பீகாரை, நாட்டிலேயே முதன்மை மாநிலமாக மாற்றும் நோக்கில், தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

குடும்பத்தில் ஒருவருக்கு நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும், ஆட்சி அமைந்த 20 நாட்களுக்குள், இதற்கான சட்டம் கொண்டுவரப்படும் என்பது உள்ளிட்ட வாக்குறுதிகள், தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

ஆனால், இந்த தேர்தல் அறிக்கையில், புதிதாக எதுவும் இல்லை என்று பி.ஜே.பி.யைச் சேர்ந்த துணை முதலமைச்சர் திரு. சாம்ராட் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் மற்றொரு மூத்த தலைவரும், மத்திய இணை அமைச்சருமான நித்யானந்த் ராயும், எதிர்க்கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள அம்சங்கள், நடைமுறை சாத்தியமற்றவை என்று குறிப்பிட்டுள்ளார்.

இது மக்களை, தவறாக வழிநடத்தும் முயற்சி என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இதனிடையே, முசாபர்பூர் மாவட்டம் கெய்காட் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட ஐக்கிய ஜனதா தள தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு. நிதிஷ்குமார், தமது தலைமையிலான 20 ஆண்டு ஆட்சியில், பீகார் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ராஷ்ட்ரீய ஜனதா தள மூத்த தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், நேற்று, சரன் மாவட்டத்தில், பிரச்சாரம் மேற்கொண்டார்.

அராரியாவில் நடைபெற்ற பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசிய ஜன் சுராஜ் கட்சி நிறுவனர் திரு. பிரசாந்த் கிஷோர், பி.ஜே.பி.-யும், AIMIM கட்சியும், சீமாஞ்சல் பகுதி மக்களை ஏமாற்றிவிட்டதாக குற்றம்சாட்டினார்.

<<<<>>>>

உலகளாவிய எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் எரிசக்தி மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் எரிசக்தி தொழில்நுட்பம் குறித்த மாநாட்டில் பேசிய அவர், இந்தியாவில் பெட்ரோலியம் மற்றும் எரிசக்தி துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாகக் கூறினார்.

உலகளாவிய எரிசக்தி சந்தை மந்தமாக உள்ள நிலையில் இந்தியாவில் இத்துறை சிறப்பாக வளர்ச்சியடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே உலகளாவிய போட்டித்தன்மையில் கூடுதல் கவனம் செலுத்துவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

10 ட்ரில்லியன் டாலர் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும்போது உள்ளநாட்டு தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு உலக நாடுகளின் சந்தைகளிலும் இந்தியாவின் சேவை விரிவடையும் என்று திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<>>>>

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட கப்பல்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில், 14 பேர் உயிரிழந்தனர்.

பசிபிக் கடற்பகுதியில் போதைப் பொருட்களுடன் சென்றுகொண்டிருந்த 4 கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இவர்கள் உயிரிழந்ததாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Pete Hegseth உறுதிப்படுத்தியுள்ளார்.

இதனிடையே இந்த தாக்குதலில் உயிர்தப்பிய ஒருவரை தேடி வருவதாக மெக்சிகோ கடற்படை கூறியுள்ளது.

<<<<>>>>

போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பினர் முழுமையாக நிறைவேற்றாததால், காஸா பகுதியில் தீவிர தாக்குதல் நடத்த இஸ்ரேல் படைகளுக்கு அந்நாட்டுப் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், காஸாவின் தென் பகுதியில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் மீது ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தியதையடுத்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி இஸ்ரேலியர்களின் உடல்களை ஒப்படைப்பதில் ஹமாஸ் அமைப்பினர் தாமதம் காட்டி வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் காஸா பகுதியைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்திருப்பதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த Montha புயல் ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகேயுள்ள நரசப்பூர் பகுதியில் நள்ளிரவில் கரையைக் கடந்தது.

இது தொடர்ந்து வடமேற்கு திசையில் நிலப் பகுதியை நோக்கி நகர்ந்து வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மணிக்கு 85 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கபப்டுள்ளது.

புயல் கரையைக் கடந்ததைத் தொடர்ந்து ரயில்பாதை சீரமைப்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட் ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி கேன்பராவில் பிற்பகல் மணி 1.45க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

Hylo ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இன்று இந்தியாவின் எஸ்.எம். சுப்பிரமணியன் - மலேசியாவின் J.H. Leong-ஐ எதிர்கொள்கிறார்.

இப்போட்டி ஜெர்மனியில் பிற்பகல் மணி 1.30க்கு நடைபெறும்.

<<<<The End>>>>